**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பட்டுக்கோட்டை**

**அசல் வழக்கு எண். 156/2022**

2026ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 24ம் நாள் புதன் கிழமை பிரதிவாதிகள் தரப்பு சாட்சியாகிய DW1 வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54வது விதியில் 9வது பிரிவின் படி) பெஞ்ச்கிளார்க் கிரேடு 3 செல்வி.S.கௌசல்யா என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர் :** | **பழனிவேல்** | **தொழில் :** | விவசாயம் |
| **தந்தை பெயர் :** | **வடிவேல்** | **சமயம் :** | – |
| **ஊர் :** | தளிக்கோட்டை | **வயது** | 62 |
| **தாலுக்கா :** | பட்டுக்கோட்டை | **சாதி:** | – |

**24.02.2026**

**முதல் விசாரணை**

நான் அசல் வழக்கில் 1ம் பிரதிவாதி ஆவேன், 2ம் பிரதிவாதி என் உடன்பிறந்த தம்பி. நான் ஏற்கெனவே பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியாக விசாரணை செய்யப்பட்டேன். DW2 ஆக என் தம்பி 2ம் பிரதிவாதி முதல் விசாரணை செய்யப்பட்டார். அவர் வெளியூரில் வேலை பார்ப்பதால் அவருடைய சாட்சியத்தை நீக்க மனு செய்து மனு அனுமதிக்கப்பட்டதன்பேரில் மீண்டும் நான் கூடுதல் நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். எனது வழக்கிற்கு ஆதாரமாக கடந்த 04.08.1965 தேதியிட்ட சுப்பையன் அம்பலகாரர் பெயரில் கிரையம் செய்த கிரைய பத்திரம் வடிவேல் பெயரில் கிரைய பத்திரம் வாங்கப்பட்டது அதன் அசல் **பி.வா.சா.ஆ.1** ஆக குறியிடுகிறேன். 06.11.1952 ல் வடிவேல் மற்றும் சுப்பையன், காரியாத்தாள் என்பவருக்கு சொத்துகளை அடமானம் வைத்த அடமான பத்திரம் பதிவு சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.2** ஆக குறியிடுகிறேன். 24.02.1987 தேதியிட்ட பசலிக்கான வரி ரசீது அசல் **பி.வா.சா.ஆ.3** ஆக குறியிடுகிறேன். தாவாவை தள்ளுபடி செய்ய

வேண்டுகிறேன்.

**வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

*Taken down by the typist to my dictation*
*in open Court read over to the*
*witness admitted and acknowledged*
***by him/her to be Correct.***

Tmt.S.Kavipriya,B.A.,L.L.B

District Munsif, Pattukkottai.